[illegible] கல்வி

௨ 11

ப்ரவரி, 1935


ஏட
T15 ம 211, N33
N35 . ௨ . 11
190340

232 32

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுள் வணக்கம் | .... | 141 |
| நூல்கள் திருத்தம் | .... | 143 |
| தாழ்ந்தவகுப்பு பிள்ளைகள் | | 144 |
| ஆசிரியர்கள் ஆராத்துயர் | | 147 |
| ஜகதீஸ் சந்திர போஸ் | .... | 150 |
| கனம் முதல் மந்திரி | .... | 153 |
| பெண்கள் மகாநாடு | .... | 156 |
| பிரான்சு போஸ்ட் மாஸ்டர் | | 157 |
| துண்டு துணுக்குகள் | .... | 159 |
| காந்திஜீயும் ஆரம்பாசிரியரும் | .... | 162 |
| கட்டாய கல்வி | .... | 164 |
| கிண்டர் கார்டன் | .... | 166 |
| என்னதான் நோக்கம் | .... | 168 |
| சிறுவர் பகுதி | .... | 170 |




72
TIS ന211,N35
N35.2.11
190340

..டசந்தா ரூ. 2 இதழ் 11 தனிப்பிரதி விலை ரூ. 0 1 6

60 நாளில் சுலபமாய் இங்கிலீஸ் கற்றுக்கொள்ளலாம்

குறைந்த விலை! பெருத்த விஷயம்!!

# ஆங்கில ஆசான்

அல்லது

## ஆங்கில போதினி

**தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்**

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், பக்ஷம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில் பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும், வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் மிகவும் முக்கியமானது. 80 பக்கங்களுக்கு மேலுள்ளது.




**விலை ரூபா 2.** [தபாற் செலவு வேறு]

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

**ஆரம்பக்கல்வி ஆபீஸ்,**

94-95, புதுத்தெரு மண்ணடி மதராஸ்.

13 JUN 1935

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்: **பி. வீரராகவன்**
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர்-2. 1934-35௵ பிப்ரவரி, இதழ்-11,

## கடவுள் வணக்கம்

பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருள்
புலப்பட வறிந்து நிலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையே னன்மைபோற்
பொருளலாப் பொருளை நாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையினே னென்றெனைநீ
விட்டுவிட நினைவையே றட்டழிவ தல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
துய்யனே மெய்யனே உயிரினுக் குயிரான
துணைவனே இணையொன்றிலாத்
துரியனே துரியமுங் காணு வதீதனே
சுருதிமுடி மீதிருந்த
ஐயனே அப்பனே எனுமறிஞ ரறிவைவிட்
டகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

# V

## Elementary Education Act - Rules - Amendments - Published for Criticism.

### Law (Education) Department.

### G. O. No. 2350, 15th November 1934.

(1) "Provided that where a Sehool has to be closed owing to the prevelence of an epidemic in its vicinity or for any other similar cause, a deficiency of not more than thirty days in the minimum attendance prescribed by this tule may be condoned by the District Educational Council, if at the time of the closure of the school, the management thereof has informent the Deputy Inspector of Sehools or the Sub Assistant Inspectress, as the case mav be, of the reasons for Such Closure".

(2) Recognition Shall not be granted to any Sehool situated in a locality whis is inaccessible to the memders of any caste or community.

(3) No teacher whose certificate has been cancelled or suspended under Madras Educational Rule 154, or whom the Director of Pnblic Instruction after due enquiry, declares to be unfi to be a teacher Shall, while such cancellation, Suspension or declaration is in forcc, be employed in a recognised school; nor shall any grant be assessed on hehalf of any such teacher.

(4) If no pupils belonging to the depressed classes aro actually attending a School, it will be deemed to refuse admission to Such pupil within the meaning of this rule, unless the management of the School Show that no such puplis are residing within a distance of one mile from the School or adduce orher satisfactory reasons fcr the absence of such pupils from the School".

92
190340 T15 — 211,433
435 · 2-9-10

# ஆரம்பக்கல்விச்சட்டம்

## ரூல்கள் திருத்தம்

### ஜீ. ஓ. நெம்பர் 2350 (15-11-34)

1. அம்மை முதலிய கொள்ளை நோய்களினாலோ, அல்லது இதுபோன்ற வேரு எந்த காரணத்தினலோ, பாடசாலை மூடப்படி நேரிட்டால், உடனே பாடசாலை மானேஜர்கள் டிப்டி இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டிரஸ், அவர்களுக்கு ரிபோர்ட்டு அனுப்ப வேண்டும். அதன்பேரில் ஜில்லாக்கல்விச்சபை அவ்விதம் மூடப்பட்ட 30 நாட்கள் வரையில் ரத்துசெய்து கிராண்டுத்துகையை பிடிக்காமல் கொடுக்க அதிகாரம் உண்டு.

2. எந்த வகுப்பு அல்லது ஜாதி, சம்மந்தப்பட்ட பிள்ளைகள் சேர்ந்து வாசிக்க முடியாத எந்த இடத்தில் பாடசாலை இருக்கின்றதோ அந்தப்பாடசாலைக்கு அங்கிகாரம் கொடுக்கக்கூடாதென்பது.

3. 154-வது எடுகேஷனல் ரூல்ஸ் பிரகாரம் எந்த் உபாத்தியாயர் சர்ட்டிபிகேட்டு ரத்துசெய்யப்பட்டிருக்கிறதோ, அவ்வுபாத்தியாயரை அங்கிகாரம்பெற்ற எந்தப் பாடசாலையிலும் வைத்துக்கொள்ளக்கூடாதென்பது. அவர்களுக்கு கிராண்டும் கொடுக்கக்கூடாதென்பது.

4. எந்தப்பாடசாலை, ஜாதி அல்லது வகுப்பின் போரால் பிள்ளைகளை சேர்க்க மருக்கின்றதோ அப்பாடசாலைக்கு அங்கிகாரம் கொடுக்கக்கூடாதென்பது.

எந்தப்பாடசாலையில் தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த பிள்ளைகள் வாசித்து வாவில்லையோ, அப்பாடசாலை அத்தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளை சேர்க்க மருப்பதாக கருதப்படும். இல்லையேல் அப்பாடசாலை மானேஜர்கள் தங்கள் பாடலாலைக்கு ஒரு மைல் விஸ்தீரணத்தில் அத்தகைய தாழ்ந்த வகுப்புப்பிள்ளைகள் இல்லையென நிரூபிக்க வேண்டும். அல்லது அவ்விதமிருக்கும் தாழ்ந்த வகுப்புப்பிள்ளைகளை தங்கள் பாடசாலையில் சேர்க்காததற்கு தகுந்த காரணங்களைக் காட்டவேண்டும்.

# ஆரம்பப்பாடசாலைகளில் தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகள்

## G. O. No. 2350 (15-11-34)

தற்போது நமது தாய் நாட்டில் ஆதித்திராவிடர்கள் முதலிய தாழ்த்தப்பட்ட மக்கள், இதர மக்களோடு சம உரிமையுடன் வாழ வேண்டுமென்ற வெரும் நோக்கத்துடன் நமது காந்தியடிகள், ஹரிஜன இயக்கம்போன்ற பல இயக்கங்களை நடத்தி வருகின்றார். இத்தகைய இயக்கங்களைப் பொது மக்கள் யாவரும் ஆதரித்து வருவது வெளிப்படை, எனினும், ஹரிஜன இயக்கமும், அவர்கள் முன்னேற்றமும், தற்போது, பத்திரிகைகளிலும், மேடைப் பிரசங்கங்களிலும் மாத்திரம் ஹரிஜன முன்னேற்றம் நிற்கின்றதே யொழிய காரியத்தில் ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணங்கள் பல உள. பலவகையிலும் உண்மையில் தாழ்ந்தவகுப்பு மக்கள் முன்னேற்றமடையவேண்டுமானால் அவர்களுக்கு முதலில் கல்வி போதிக்கும் வழியைத் தேட வேண்டும். கல்வியென்ற பொழுது உயர்தரக் கல்வியன்று. முதலில் ஆரம்பக் கல்வி இம்மக்களின் குழந்தைகளுக்கு அவசியம் போதிக்கப்படவேண்டும். ஒவ்வொரு சேரியிலும் அவர்களுக்கென பல பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். பல பிரசாரங்களின் மூலமாய் அவர்களின் பழக்க வழக்கங்களை நல்ல வழியில் சுகாதார முறையில் மாற்றவேண்டும். அவர்கள் வாழும் இடங்களைச் சுத்தப்படுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், அவர்கள் தற்போது எந்த நிலையில் இருக்கின்றார்கள், அவர்களை எந்த நிலைக்குத் திருப்பினால் முன்னேற்றமடைவார்கள் என்பதை சீர்திருத்தக்காரர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். 100-க்கு 2 சேரிகளுக்குமேல் இந்த ஹரிஜன இயக்கம் உண்மையிலேயே தெரியாது. சிலர் சேரியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களைக்கண்டு "ஏன் ஐயா உங்கள் சேரிகளை ஏன் சுத்தமாக வைத்துக்கொள்ளக் கூடாது, உங்கள் பிள்ளைகளை சேரி பாடசாலைகளுக்கு ஏன் அனுப்பிக்கக் கூடாது, இதர ஜாதி மக்களைப்போல் நீங்கள் ஏன் சீர்திருந்திக்கொள்ளக் கூடாதென்று" கேட்டால், அதற்கு பதில் "ஐயா எங்கள் பிள்ளைகளை நாங்கள் பாடசாலைக்கு அனுப்பிவிட்டால், ஆடு மாடு மேய்ப்பது யார், புலன்களையும், தோட்டங்களையும், பார்வை பார்ப்பது யார், இன்னும் வீட்டுச் சில்லரைத் தொழிலைப் பார்ப்



பவர்கள் யார், அப்படித்தான் 3, 4 வகுப்புவரையில் படிக்கவைத்தால் பிறகு அப்பிள்ளைகள் கிராம வேலைகளைச் சரிவரச் செய்ய பிரியப்படுவதில்லை. அப்படி இன்னும் அதிகமாக கல்வி கற்பித்தாலோ, அவர்களுக்கு வேலை கிடைப்பதோ அரிது. பிறகு கிராம வேலைகளுக்கே உபயோகமில்லாமல் போய்விடுகின்றார்கள் என்பதான பல உண்மையான கஷ்டங்களை யெடுத்துக் கூறுகின்றார்கள்.

இந்த நிலையில் அரசாங்கத்தார் இது சம்பந்தமாக ஆரம்பக் கல்விச் சட்டத்தின் சில விதிகளை மாற்றுவதற்காக சில திருத்தங்களை கெஜட்டில் பொதுஜன அபிப்பிராயத்திற்காக வெளியிட்டிருக்கின்றனர். அதில் எல்லா ஜாதிப் பிள்ளைகளும் சேர்ந்து படிக்க முடியாத இடத்தில் பாடசாலை இருக்குமானால் அல்லது நிருவப்படுமானால் அதற்கு அங்கீகாரம் கொடுக்கக்கூடாது என்பதாக விதியைத் திருத்தியிருக்கிறார்கள். இதற்கு முன்பு எந்தப்பாடசாலை எல்லா ஜாதியாரையும் சேர்த்துக்கொள்ள மறுக்கின்றதோ, அப்பாடசாலைக்கு அங்கீகாரம் கொடுக்கக்கூடாதென இருந்தது. இது நியாயம். ஏனெனில் எல்லா ஜாதிகளும் கலந்த பொது மக்களிடத்திலிருந்து வரிவசூலிக்கப்படும் பணத்திலிருந்து கொடுக்கப்படும் கிராண்டைப் பெற்றுக்கொண்டு எல்லா ஜாதியாரையும் சேர்த்துக்கொள்ளாமல் சில ஜாதியாரை மாத்திரம் சேர்த்துக் கொள்வதென்பது தர்மமல்ல.

ஆனால் எல்லா தாழ்ந்த உயர்ந்த ஜாதியாருடைய பிள்ளைகளும் சேர இயலாத இடங்களிலுள்ள பாடசாலைகளை அங்கீகாரம் செய்யக்கூடாதென்பது சரியான விதியல்ல. உதாரணமாக உயர் ஜாதி ஹிந்துக்களோ, பிராமணர்களோ, நிறைந்த ஓர் இடத்தில் பாடசாலை இருக்குமானால், தாழ்ந்த ஜாதிப்பிள்ளைகள் அங்குவர சாத்தியமில்லை. அப்பிள்ளைகளும் அங்கு படிப்பதில்லை. அதனால் அப்பாடசாலைக்கு அங்கீகாரம் கிடையாதென்றால் அதை எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும். அப்பாடசாலை மானேஜர் தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகள் வந்து அவர்களை சேர்க்கமாட்டேனென்றால் அந்த மானேஜர்மீது குற்றம் சாட்டலாம். உண்மையைக் கூறுமிடத்து 100-க்கு 95 ஆதித்திராவிட மக்கள் ஜாதி ஹிந்து பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை அனுப்பப் பிரியப்படுவதில்லை. தற்போது அநேக ஆரம்பப்பாடசாலைகள் ஆதித்திராவிட பிள்ளைகளைச்சேர்க்கத் தயாராக இருக்கின்றன.

உண்மையில் அரசாங்கத்துக்கு ஆதித்திராவிட மக்களை முன்னேற்ற மடையச்செய்யவேண்டுமென்ற நோக்கமிருப்பின் ஒவ்வொரு ஆதித்திராவிடச் சேரியிலும், தாழ்ந்த வகுப்பு மக்கள் வசிக்கு மிடங்களிலும் அவர்களுக்கென ஆரம்பப்பாடசாலைகளை ஸ்தாபிக்கவேண்டும். ஜப்பான் தேசத்தில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமுடியாத தாய்தந்தையர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி கல்வி கற்பிப்பதுபோல சென்னை அரசாங்கத்தாரும் பிள்ளைகளை அனுப்ப இயலாத தாய் தந்தையர்களுக்கு, பண நஷ்ட ஈடுகொடுக்க முன்வரவேண்டும். சட்டத்தைத்திருத்திவிட்டதனால் தாழ்ந்தவகுப்பு மக்கள் எவ்வகையிலும் முன்னேற்றமடைய முடியாது. எந்த பாடசாலை தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளைச் சேர்க்க மறுக்கிறதோ அப்பாடசாலையின் அங்கீகாரத்தை எடுத்துவிடுவது ஒழுங்கு; அதைவிட்டு தாழ்ந்த மக்கள் படிக்காததினால் அப்பாடசாலை தாழ்ந்த மக்களைச் சேர்க்க மறுத்ததாகக் கருதப்படுவதும், அவ்வாறு அப்பிள்ளைகள் சேராத காரணத்தால் அப்பாடசாலை மானேஜரை காரணங்கள் கேட்பதும் தகுதியான சட்டமில்லை என்பது எமது அபிப்பிராயம். அவ்விதம் அரசாங்கத்திற்கு எய்டட் பாடசாலைகளில் தாழ்ந்த வகுப்பு மக்களைச் சேர்க்க அபிப்பிராய மிருப்பின், எந்தப்பாடசாலையில் தாழ்ந்த வகுப்பு பிள்ளைகள் அதிகமாக வாசிக்கிறார்களோ அப்பாடசாலைக்கு அதற்கென 100-க்கு 20 அல்லது 30 அதிகப்படியாக கிராண்டு உயர்த்திக்கொடுக்கப்படுமென ஒரு அறிக்கையை வெளியிட்டால் ஆயிரக்கணக்கான தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகள் எய்டட் பாடசாலையில் இருப்பதைக் காணலாம். பணமென்றால் பிணமும் வாய்த்திறக்குமென்பது நமது நாட்டில் உலவிவரும் பழமொழி யல்லவா. வெறுங்கையில் முழம் போட்டால் ஒன்றும் நடக்காது. பணம் என்றைக்கு ஆரம்பக்கல்விக்கு அதிகப்படுகின்றதோ அன்றைக்குத்தான் ஆரம்பக்கல்வி விருத்தியாகி நாடு நலம்பெறுமே யொழிய மற்ற சற்ற சட்டத்தினாலோ, பிரசாரத்தினாலோ, மகாநாடுகளினாலோ, தீர்மானங்களினாலோ, ஆரம்பக்கல்வி அபிவிருத்தியோ, தாழ்ந்த மக்கள் முன்னேற்றமோ அடைய முடியாது.

# ஆரம்ப ஆசிரியர்களின் ஆராத்துயர்

---

M. அண்ணாமலை

ஜில்லா போர்டின் அதிகாரத்திற்குட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள, ஆசிரியர்களின் நிலைமை என்ன என்பது பலருக்கும் தெரிந்த விஷயம். ஆசிரியர்கள் சில பொதுமக்களாலும் சில அதிகாரிகளாலும் வெகு இழிவாக நடத்தப்படுகிறார்கள், மதிக்கப் படுகிறார்கள். இந்தஉண்மையை நாம் பிரத்தியக்ஷமாக பிரதிதினமும் கவனித்து வருகின்றோம். இதற்கென்ன காரணம்? ஆசிரியர்களுக்குக் கொடுபடும் குறைவான சம்பள விகிதமே ஓரளவு அவர்களது கேவல ஸ்திதிக்குக் காரணமாகும். ஏனைய உயர்தர பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் எத்தகைய வேலைசெய்கிறார்களோ அத்தகைய வேலையைக்காட்டிலும் அதிகமாகத்தான் ஆரம்ப ஆசிரியர்களும் செய்துவருகிறார்கள். ஆனால் அவ்வாசிரியர்கள் மட்டும் நூற்றுக் கணக்காக மாதந்தோறும் சம்பளம் பெற்று சுகமாக வாழ்கின்றார்கள். ஆரம்ப ஆசிரியர்களோ சராசரி பதினைந்து இருபது ரூபாய்க்குமேல் கதிமோக்ஷமில்லாமல் கிடைத்ததை வாங்கிக்கொண்டு நாள் கழிக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இத்தன்மையில் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கௌரவம் எங்ஙனம் கிடைக்குமென்று கேட்கிறோம்? உயிர் மெய் எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பவர் தரித்திரவாழ்வு நடத்துவதும், அதற்குமேல் சிரமமின்றி நடிகரைப்போல் புறம்பாட்டு பாடுவர் ஆடம்பர வாழ்வு நடத்துவதும், கலியுக தர்மமென்று சொல்லப்படுவதைத் தவிர வேறு என்ன கூறுவது.

சமீபத்தில் கவர்ன்மெண்டார், ஆசிரியர்களின் சம்பளத்தை மாகாணம் முழுவதும், ஒரேவிதமாக நிர்ணயிக்கும்படி ஓர் சுற்றுத் தரவை அனுப்பியுள்ளார்களென்பது பத்திரிகைவாயிலாகத் தெரிய வருகிறது. அத்திட்டமோ மிகக்குறைவு என்று எல்லோரும்

அறிந்தவிஷயமே. இதை அறிந்த ஆரம்ப ஆசிரியர்கள் "ஊமையன் கண்ட கனவைப்போல் தலையிலிட்டது இலைக்கு வரும்" என்பதாக மனம் புழுங்கி அல்லும் பகலும் வருந்திக்கிடக்கின்ற இச்சமயத்தில் "பட்டகாலிலே படும்" என்ற பழமொழிக்கு ஏற்றாப்போல் சில ஜில்லாபோர்டு அதிகாரிகள், ஆசிரியர்களின் சம்பளத்தைக் கூடிய சீக்கிரத்திலோ அல்லது சிலமாதங்கள் கழித்தோ, குறைவு (Cut) செய்ய நேரிடுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தோ! பரிதாபம். "பாவி மகன் படுந்துயரம் பார்க்கொணாதே" என்ற அமுதவாக்கு இவ் உபாத்தியாயர்களின் பங்கில் உண்மையாக விளங்கிவருகிறது. இந்நிலையில் ஆரம்ப ஆசிரியர்கள் தங்களின் ஊக்கங்குன்றி, உற்சாகமிழந்துவருவதோடு, மேற்கொண்ட தொழிலைச்செய்யசக்தியற்றவராகிறார்கள். ஆனதுபற்றி இத்தகைய உத்திரவுகளைப் பிறப்பித்து அடிக்கடி சம்பளங்களைப் பிடித்துக்கொள்வது முதலியவற்றால் கல்வி முன்னேற்றமடையுமா என்றுதான் கேட்கின்றோம்.

இதுவரை ஆண்களில் 100-க்கு 7 பேரும், பெண்களில் 3 பேரும் மாத்திரமே கல்வி கற்றவர்களாய் இருக்கிறார்கள். உண்மை இப்படி இருக்க, எதிர் காலத்தில் பிரஜைகளாக விளங்கப்போகும் சிறுவர்—சிறுமிகட்குக் கல்வியை அளிக்கும் ஆசிரியர்களுக்கு விசேஷ சௌகரியங்களைப் போர்டார் ஏற்படுத்தாமல் இருப்பது, வருந்தத் தக்கது. பண நெருக்கடியால் ஆசிரியர்களின் சம்பளங்களைக் குறைக்க நேரிடுகிறது என்பதே போர்டாரின் சமாதானம். அதற்கு வேறு துறைகளில் செலவு செய்வதைச் சுருக்கிக்கொண்டு, கல்வி வளர்ச்சிக்கு அதிகம் செலவு செய்யலாம் என்பதும் வழக்கமான பழையபேச்சே ஒழிய புதிய பேச்சல்ல, எது எப்படி இருந்தாலும் முன் சொல்லப்பட்ட கல்வியின் புள்ளியை அனுசரித்து ஜில்லா போர்டார் ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறைக்கப்படும் என்று நோட்டீஸை அமுலுக்குக் கொண்டு வாராமல், நிறுத்தி வைப்பது, விசேஷமாகும். ஒரு நாட்டு நாகரீகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஆரம்ப ஆசிரியர்களே காரணபூதர்கள். ஆதலால் அவர்களின் உண்மை யுணர்ச்சிக்கும் கஷ்டத்திற்கும் முட்டுக்கட்டை போடாமல் அவர்களின் மனம் சந்தோஷ மடையுமாறு, இந்நோட்டீஸை எக்காலத்தும் அமுலுக்குக்கொண்டு வாரா



நிறுத்தி வைப்பதோடு ரத்து செய்யவேணுமாய் ஸ்தலஸ்தாபனத் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் ஆரம்ப ஆசிரியர்களின் கடமை என்ன? சம்பளத்தைக் குறைக்கப் போவதாக நோட்டீஸுக்குக் கொண்டு வந்த ஸ்தலஸ்தாபனங்களின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, தங்கள் நிலைமையை விரைவில் ஆங்காங்கு நடக்கும் தங்களுடைய சங்கத்தின் சார்பாக ஜில்லா போர்டார் கொடுத்திருக்கும் நோட்டீஸை ரத்து செய்யத் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகின்றோம். இதில் ஒவ்வொருவரும் குன்றாத ஊக்கமுற்றிருப்பரேல் உலகப்புகழாளரில் ஒருவாராகமாறி இன்பவாழ்வு எய்தி இருக்கலாம். பொய்யாமொழிப் புலவர் ஊக்கமில்லாமையால் பருத்த உடலும், கூரிய தந்தங்களும் உடையதாகிய யானை, இவ்விரு தகுதியுமில்லாத புலி தாக்கினால் அஞ்சுகின்றது என்னும் உதாரணத்தால் ஊக்கத்தின் ஆற்றலை வற்புறுத்தும் "பரியது கூர்ங்கோட்டதாயினும் யானை வெரூஉம்புலிதாக்குறின்" என்னும் குறட்பாவை யருளினார். இதனால் உள்ளத்தில் ஊக்கமில்லாதவர்களுக்கு உடல் வன்மை உண்டானாலும் அது பயன்தராதென்பது உணரப்படுகின்றது. அஃதில்லாதார்களை மாக்களென்று இழித்துக் கூறியுள்ளார்.

பகீரதன் கங்கை கொண்டுவந்ததாக காணப்படும் புராணகதை ஒன்றே நமக்குப் போதிய சான்றாகும். "தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதான் மெய்வருத்தக்கூலிதரும்" என்பது பொய்படாதாதலின், இந்தச் சமயத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் வாய் மூடிக்கொண்டுவாளா இருந்தால் "வறுமையும் இழிவும் ஆசிரியர்களின் பிறப்புரிமை" என்ற சொல் உறுதியாகிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆகையால் ஆரம்ப ஆசிரியர்களே! இதுகாறும் உறங்கியதுபோதும், இன்றே விழிமின்! எழுமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்! இறுதியில் வெற்றி நமதே யாகுமென்பதில் ஐயமில்லை. உங்கள் துயரை நீக்க எல்லாம்வல்ல கருணையங் கடவுள் அருள்புரிவாராக.

# சர் ஜகதீஸ் சந்திர போஸ்

உலகம் தோன்றியது முதல் இற்றை நாள் வரையில் அடைந்துள்ள மாறுதல்களை உற்றுநோக்கின் வியப்பினும் வியப்பாய்த் தோன்றுகிறது. விஞ்ஞான சாஸ்திரங்களிலும், பூதபௌதிக சாஸ்திரங்களிலும் அடைந்துள்ள பெரும்மாறுதலுக்கு காரணகர்த்தர்கள் பலர் தோன்றி மறைந்திடினும் நம் கண்முன் தோன்றி விளங்கும் நம் தாய் நாட்டில் அவதரித்த சர். ஜகதீஸ் சந்திர போஸ் ஒருவராவார். அந்நல்லோரின் அரிய வரலாற்றினையும் அவர் செய்த ஆராய்ச்சிகளையும் இண்டுக் கூறுவோம்.

ஜகதீச சந்திர போஸ் வங்காளத்திலுள்ள பிரம்பூர் கிராமத்தில் 1858௵ நவம்பர்மீ 30 ஆந்தேதி பகவன் சந்திர போஸுக்கு செல்வப் புதல்வராய்ப் பிறந்தார். அறிவும் ஒழுக்கமும் கொண்ட பகவன் சந்திர போஸ் தம் குமாரரை நன்னெறியிற் பழக்கி அக்கிராமத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் விடுத்து கல்வி பயில் வித்தார். சில செல்வந்தர்களைப் போல் தம்வீட்டிலேயே தனிமையகா சோதிக்கப்பட்டு மேல் வகுப்புக்கு நேராய் சேர்க்காமல் கிராமத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் சேர்த்ததினால் கிராம அமைப்பு, தொழில் முறை விவசாயம் முதலியவை நன்கறிந்து அங்கு பயிலும் பலஜாதி மக்களையும் தம் சகோதரர்களாகக்கருதும் உயர் நிலையைப் பெற்றார்.

ஆரம்பக் கல்வி முற்று பெற்றதும் சில காலம் காளி கட்டடத்திலுள்ள செயின்டு ஸேவியர் கலாசாலையில் படித்து பி. ஏ. பட்டம் பெற்று 1885-ஆண்டு இலண்டன் சர்வகலாசாலையில் இயற்கை தத்துவநூலில் பி. எஸ் ஸி. (B. Sc.) பட்டத்தைப் பெற்றார். பிறகு தாய்நாடு திரும்பி மாகாண கல்லூரியில் பௌதிக சாஸ்திர போசிரியராக (Professor Of Physics) அமர்ந்தார். அக்காலத்தில் நம் ஜகதீஸர் வேலையை மாத்திரம் கவனித்துக் கொண்டிராமல் பல ஆராய்ச்சிகளைச் செய்து பத்திரிகை வாயிலாக வெளியிட்டுவந்தார். மின்சார அலைகளைப்பற்றித் தீவிர ஆராய்ச்சியே போஸின் பெயரை உலகெலாம் பரவச்செய்தது. இவர் ஆராய்ச்சிகளைப்படித்த பல பெருந்தகையாளர்கள் பொருளுதவியும் செய்தனர்.



போஸின் ஆராய்ச்சிகளையும், பெருமை படுத்தப்படுவதையும் கண்ட வங்க அரசாங்கம் பல வசதிகளை அறிந்துதவியது. லண்டன் சர்வகலாசாலையார் டாக்டர் ஆப் சைன்ஸ் என்னும் பட்டமும் அளித்தனர். அக்காலத்தில் மின்சார அலைகளின் ஆராய்ச்சி செய்யப் புகுன்ற மூவருள் போஸ் ஒருவராவார் எனினும் முதன் முதலில் வெற்றிபெற்று தாம் கண்டுபிடித்தவைகளை 1895ஆம் ஆண்டு வங்காள கவர்னரின் தலைமையில் வெகு அழகாக விளக்கிக் காட்டின பெருமை போஸையே சார்ந்ததாகும். 1897-ஆம் ஆண்டு லண்டன் ராயல் சங்க ஆதரவில் பல நிபுணர்களடங்கிய கூட்டத்தில் பயிற்சிமூலம் (Practically) யாவரும் வியக்கத்தக்கவாறு மின்சார அலைகளைப்பற்றி சொற்பொழிவு செய்தார். போஸின் ஆராய்ச்சிகளை வெள்ளையரின் பொறாமையால் இராயல் சங்கத்தாரால் பிரசுரிக்கப்படவில்லை. அதனால் போஸுக்கு வருத்தமுண்டாயிற்று. உடனே லண்டனுக்குச் சென்றார் இவர் ஆராய்ச்சியைக் கேட்டு பேருவகை கொண்ட இரு போசியர் ராயல் சங்கத்துக்கு அழைத்தேகி அவர் பிரசங்கம் பிரசுரிக்காததன் காரணம் யாதெனவினவ அன்னவரின் ஆராய்ச்சிகள் இதற்கு முன்னமேயே வெளியிட்டு அச்சிடப்பட்டதெனப் பொறாமையாளர் கூறினர் போஸ் வெளியிட்ட ஆராய்ச்சிக்குப் பின்னரே வேறொருவர் அவற்றைத் தம் பெயரால் வெளியிட்டார் என்பதை அறிந்த பல பேரறிஞர் போஸைக் கௌரவித்தனர். திரும்பவும் 1915-ஆம் ஆண்டு அச்சங்கத்திலேயே புதிதாகக் கண்டறிந்த ஆராய்ச்சிகளை இந்தியாவிலேயே தயார்செய்த மேன்மையான கருவிகளைக்கொண்டு பயிற்சிமூலம் நிரூபித்துக் காட்டினார். பிறகு பாரிஸ், வியன்னா நகர சரித்திர சங்கத்தார் வரவழைத்து சொற்பொழிவுகேட்டு கௌரவித்தனர். மூன்றாவதாக அமெரிக்காவில் பல நகரங்களுக்கும், ஜப்பானுக்கும் சென்று சொற்பொழிவாற்றி பெரும் புகழுடன் தாயகம் புகுந்தார்.

இவரை உலகம் போற்றுவதற்கு இவர் கண்டறிந்த உண்மைகளில் சாலச்சிறந்தவைகள் யாதெனில், தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் நரம்பு சம்பந்தம் ஒன்றே, மைமோசா மரத்துவாழ்க்கை மனிதவாழ்க்கையையே மெய்பித்துவிடுகிறது; என்றும் நாகரீக மக்களைப்போன்றே மரங்களும் இரவில் பன்னிரண்டு மணிக்குமேல்

தூங்கவாரம்பித்து காலை எட்டுமணிக்கு விழித்துக்கொள்கிற தென்பதை விளக்கிக்காட்டினார். இவ்வித ஆராய்ச்சிகளைக்கண்டு இவருக்கு அரசாங்கத்தார் ஆயுள் வரையில் முழு சம்பளம் கொடுக்குமாறும், சர்பட்டமும் அளித்தார்கள். 1900-ஆம் ஆண்டு பாரிசில் நடந்த சரித்திர மகாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். 1903-ஆம் ஆண்டு சி. ஐ. இ. பட்டமும் 1911-ம் ஆண்டு சி. எஸ். ஐ. பட்டமும் அளித்தனர். 1917-ஆம் ஆண்டு போஸ் தமது 59-வது வருட பிறப்பன்று கல்கத்தாவில் பெரும் மூலதனம் கொண்டு ஒரு ஆராய்ச்சிசாலை திறந்துவைத்தார். அத்திறப்பு விழாவிற்கு இராஜப்பிரதிநிதியான செம்ஸ்போர்டு பிரபுவும், வங்காள கவர்னரும் வந்திருந்தபோது உலக நிபுணர் யாரும் செய்திராத ஆராய்ச்சியாகிய ஒன்று செய்துகாட்டினார். இரண்டு மரங்களுக்கும் மயக்கமருந்துகொடுத்து வேரோடு பிடுங்கி வேறோர் இடத்தில் புதைத்து மயக்கமருந்தை எடுத்துவிட்டால் அவை நன்றாய்செழித்துவளரும் என்பதை நிரூபித்துக் காட்டினார். இதைக்கண்டு வியந்த வைஸ்ராயும் தம் இருகைகளால் போஸைத் தழுவிக்கொண்டார். மேன்மேலும் ஆராய்ச்சிசெய்து மரங்களின் வளர்ச்சியை விநாடிக்கொருமுறை அறிவிக்கக்கூடிய அற்புத கருவியொன்றைக்கண்டறிந்து உலகிற்குக் காட்டினா. 1918-ஆம்ஆண்டு ஐரோப்பாவிலுள்ள பல நகரங்களுக்கும் சென்று தம் ஆராய்ச்சிகளை விளக்கிக்கூறி பெருமை பெற்றார்.

போஸ் தம் அறிய ஆராய்ச்சிகளால் நாகரீகமும், செல்வமும், அறிவும், படைத்தமேனாடுகள் இந்தியாவுக்குத் தலைவணங்குமாறுசெய்தபாக்கியம் போஸைச் சார்ந்ததாகும். இன்னும் பல துறைகளில் மேனாட்டார் வியக்குமாறு அவதரித்த புண்ணியர்கள் பலர் பெற்ற பாக்கியம் இந்தியாவுக்கு இருக்கிறது சமத்துவத்திற்கு உயிரையும் அர்ப்பணம் செய்யும் சபர்மதி முனிவராகிய காந்திமகானும், சென்ற இதழில் விவரித்துரைத்த இலக்கிய காவியங்களில் தலைசிறந்த ரவீந்தரநாத்தா கூரும், பூதபௌதீக சாஸ்திர நிபுணரெனவிளங்கும் சர் C. V. ராமனும் போன்றபலரை இந்தியா பெற்று சிறப்புடன் விளங்கும் பாக்கியம் பெற்று இருக்கிறது. இன்னும் இவர்களைப் போன்ற பெருந்தகையார் பலர் பிறப்பின் அயல் நாட்டாருக்குத் தலை வணங்கா பாக்கியமும் சீரும் சிறப்பும் என்றும் பெற்று விளங்கும்.

நாக முத்தம்மாள்

# கனம் முதல் மந்திரியும் ஆரம்பாசிரியர்களும்

---

(P. பரிமணப்பல்லவராயர்.)

கனம் முதல் மந்திரியவர்கள் 30-11-34-ல் நெல்லூருக்கு விஜயம் செய்தபோது, "தற்போது சில ஆரம்பாசிரியர்கள் பெறும் சம்பளம் ஒரு பியூன், டபேதார்கள் வாங்கும் சம்பளங்களைக் காட்டிலும் குறைந்து வாங்குகிறார்களென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆரம்பாசிரியர்கள் பொருளாதார நிலையும், செல்வாக்கும் ஓரளவு உயர்த்தப்பட்டாலல்லது ஆரம்பக்கல்வி நமது நாட்டில் விருத்தியடைய இடமில்லை யென்பதை அரசாங்கம் அறியும். ஆதலினால்தான் தற்போது அரசாங்கம் ஆரம்பாசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தி ஓர் புதிய சம்பளத்திட்டத்தைத் தயாரித்து எல்லா லோக்கல் போர்டு பாடசாலைகளையும் அனுசரிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறது. இதைப்பற்றி எந்தச் சங்கமும் பத்திரிகைகளும் அரசாங்கம் செய்த காரியத்தைப் புகழ்ந்து வரவில்லை" என்று கூறினதாகத் தெரிகிறது.

தாலுகா போர்டுகள் இருந்தபோது ஆரம்பாசிரியர்கள் ரூபா 20 வாங்கிவந்தார்கள். இப்போது ஜி. ஓ. 5096 எல். எம். 7-12-34 ஜி. ஓ. 2504 எல். எம். 23-5-34 உத்திரவுகளினால் (ஓர் புதிய ஆசிரியர்) பெருவது ரூ. 15. இதுதானா ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தியது! இதுதானா பியூன்கள், டபேதார்கள் பெறும் சம்பளம்! இதுதானா இவர்களின் சம்பளங்களைவிட உயர்த்தப்பட்டிருப்பது! இதுதானா அரசாங்கம் ஆரம்பக்கல்வியை விருத்தியடையச் செய்வது! அந்தோ, ஆரம்பக்கல்வி அபிமானிகளே! 20. ரூபாவிலிருந்து 15 ரூபாவுக்குக் குறைந்திருப்பதுதான், ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியை நாடி சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறதெனின், இதைவிட விந்தையான விஷயம் வேறுண்டா என்பதைக் கவனியுங்கள்! அதிகார வர்க்கத்திலுள்ள ஓர் உயர்தர அதிகாரிக்கு, அவரின் கீழ் ஆசிரியனாயுள்ள ஒருவன் தங்கள் வர்க்கத்தாருடைய குறையை இந்த வார்த்தைகளைவிட வேறு வார்த்தைகளில் எடுத்துக்காட்டுவது உசிதமானதாயிரா

தென்பது எவரும் அறிந்தது. பழைய விகிதப்படி சம்பளம் வாங்கி வந்தவர்களுக்குப் புதிய விகிதப்படி சம்பளம் குறைக்கப்பட்டிருக்கிறது. இக்குறைவைப்பற்றி செப்டம்பர் மாதம் கனம் டிப்டி டைரக்டர் அவர்களையும், கனம் கல்வி மந்திரியவர்களையும் ஆரம்பாசிரியர்கள் பேட்டி கண்டபோது புதிய விகிதத்துக்குமேல் அதிகமாகப் பெற்று வந்ததை அலவன்சாக லோக்கல் போர்டார் கொடுப்பதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லை என்றார்கள். லோக்கல் போர்டாரோ, அப்படி குறைத்திருப்பதும் சிலருக்குத் தானென்றும், இதைப்போல் சிலருக்கு வாங்கிவந்ததற்குமேல் உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், குறைக்கப்பட்டதைக் குறைக்காமலே கொடுப்பதற்கு போர்டில் பணமில்லை யென்றும் கூறுகிறார்கள். ஆனால் நாளது டிசம்பர் மாதம் முதல் வாரத்திலே கனம் முதன் மந்திரியவர்களைப் பேட்டிகண்டு பேசியவர்களுக்கு, புதிய சம்பளத் திட்டத்திற்கும் இதுவரை வாங்கிவரும் சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அலவன்சாகக் கொடுக்கப்படுமென்றும், இதுபற்றி சர்க்கார் உத்திரவில் விவரமாக ஏற்படவில்லை யென்பது உண்மை என்றும், விளக்கிக் காட்டியுள்ளார்களென்று தெரிகிறது. என்றாலும், ஆரம்பாசிரியர்களாகப் புதிதாய் வருகிறவர்களுக்குங் கூட புதிய திட்டத்தின் சம்பளம் மேலே காட்டியபடி மிகக் குறைந்ததென்பதும், அத்தொகை முன்பிருந்த திட்டத்திற்குக் குறைந்ததேயன்றி உயர்த்தப்பட்டதாகாது என்பதையும் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

அதிகாரிகள் ஒருவேளை சிற்றுணவு கொள்ளாவிட்டாலும் ஒரு காரியமும் செய்ய உற்சாகமற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். இந்த ஒருவேளைச் சிற்றுணவின் மதிப்பே ஆரம்பாசிரியர்களின் புதிய விகிதமான மாதச்சம்பளமென்றால், இதைக்கொண்டு ஜீவனம் நடத்த இயலுமா? இயலாதென்றாலும் "எலி ஒன்றும் கிட்டாத காலத்தில் பூனை விரதங்கொண்டேன் என்று சொல்லுமாம்" என்பதுபோல ஜீவனம் நடத்தும் ஆசிரியர்களின் அறிவு விருத்தியும் எப்படிப்பட்டதாக இருக்குமென்பதை அறிஞர்களே ஆராய்ந்து பாருங்கள். இதிலிருந்தே ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தி என்பது, ஆரம்பக்கல்வியென்பது வெறும் வாய்ப்பேச்சு என்றே எவருக்கும் புலப்படாமற்போகாது. உள்ள நிலைமையை



இவ்விதம் எடுத்துக்காட்டுவதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு வெறுப்பாக ஏற்படினும் ஏற்படலாம். ஆரம்பக்கல்வியில் அதிதீவிர எண்ணமுடைய ஒருவனுக்குத்தோன்றும் இவ்வித எண்ணங்களை வெளியிடாமலிருப்பது பெரிதும் சாத்தியமில்லை. உழைப்பில் உற்சாகமில்லை; உற்சாக மேற்படாது, இருக்கும் எண்ணமும் உற்சாகமும் எங்கோ ஓடிவிடக்கூடும் என்பதும் அறிஞர் அறிந்தது தான்: ஆரம்பக்கல்வியைத் தாங்கிக்கொண்டிருக்கிறபேர்க்கும் என்னமோ நீ உன் வேலையை, உன்னைப் பொறுத்தவரையில் பார்த்துக்கொண்டு போகிறதானே அதிகாரிகளின் செயலில் நீ தலையிடுவானேன் எனலாம் எனினும், ஆரம்பக்கல்வியின் நிலைமை அத்துறையில் வேலை செய்பவர்கட்குத்தான் தெரியுமேயன்றி அதில் சம்மந்தப்படாதோர்க்கு அவ்வளவு அறிய வராது என்பது அறிஞர்கள் கண்ட உண்மையும் முடிவுமாகும். ஆனது பற்றியே அத்துறையில் உழைப்பவர்களில் ஒருவனும் அதன் விருத்தியில் தீவிரப்பற்றுள்ளவனுமாகிய யான் இதுபற்றி இவ்வளவு தூரம் எழுதவந்ததேயன்றி, வேறன்று. ஆதலால் அதிகாரிகளும் அறிஞர்களும் இவ்வபிப்பிராயத்தை அதிகப்பிரசங்கித்தனமானதென்று கருதமாட்டார்களென்று கருதுகிறேன்.

நாட்டின் முன்னேற்றத்திற்காகவே சட்டசபைகளுக்குச் செல்லுவதாக வெளிப்படையாகக்கூறும் நம் எம். எல். சி. கனவான்களுக்காவது இவ்வித கூற்று விளங்காமற்போகாது. எனினும், எலக்ஷனின்போது தேச முன்னேற்றமே தங்கள் முக்கிய நோக்கமெனக் கூறுபவர்கள் ஆரம்பக்கல்வியின் விருத்தியின் காரணமான இவ்வித பிற்போக்கான விஷயங்களை கனம் P. V. கிருஷ்ணய்ய சௌத்திரியார் M. L. C. அவர்களைப்போல் தாங்களும் கவனிப்பார்களென்று பெரிதும் நம்புகின்றோம்.

From:— P. பரிமணப்பல்லவாராயர்,

ஹெட்மாஸ்டர், போர்டு ஆண் பாடசாலை,
மேலக் கல்கண்டார் கோட்டை,
பொன்மலை, திருச்சி.

# அகில இந்திய பெண்கள் மகாநாடு

## ஆண், பெண்பிள்ளைகள்

## ஆரம்பப் பாடசாலையில் கலந்து வாசிக்கலாமாம்

31-12-34 ல் கராச்சியில் ஸ்ரீமதி பர்டுன்ஜி ரஸ்துான்ஜி அம்மையாரின் தலைமையின்கீழ் நடந்தேறியது. அதில் எலிமென்டரி, ஸெகன்டரி, காலேஜ் முதலிய எல்லா வகுப்புகளிலும் ஆண் பெண் இருவகுப்பு மாணவர்களும் கலந்து வாசிக்கலாம் என்று மகாநாட்டில் கொண்டுவந்த தீர்மானத்தை, ஸ்ரீமதி எப். இ. கேப்லாண்ட் அம்மையார் எலிமெண்டரி பாடசாலைகளிலும், காலேஜ் வகுப்புக்களிலும் அவ்விதம் ஆண் பெண்கள் கலந்து வாசிப்பது ஒழுங்கே யொழிய, ஸெகண்டரி பாடசாலையில் அவ்விதம் வாசிப்பது பிசகென்பதான, ஓர் திருத்தப் பிரேரபனையைக் கொண்டுவந்தார். அது ஏகமனதுடன் மகாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

* * * *

ஜப்பானில் 6 விருந்து 12 வயதுதரையிலுள்ள குழந்தைகள் எல்லாம் கட்டாயம் பள்ளிககூடம் செல்லவேண்டுமாம். இந்த வயதுள்ள குழந்தைகளில் 100-க்கு 98 குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லுகின்றனர். ஜப்பானைப் போன்ற சிறுதேசத்தில் 25000 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஜப்பானின் ஜனத்தொகை 850 லட்சம்.

* * * *

“கிராமவாசி தனது உணவுக்கு வேண்டிய மாவைத்தானே அரைத்துக்கொள்ளும்படி நான் சொல்லுகிறேன், தேகபுஷ்டி தரும் தவிட்டோடு உடையா முழு அரிசியைச் சாப்பிடும்படிச் சொல்லுகிறேன். தனது கரும்பிலிருந்து தனக்கு வேண்டிய வெல்லத்தைத் தானே தயாரித்துக் கொள்ளும்படி சொல்லுகிறேன். கிராமவாசிகள் மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது மாத்திரமல்ல. அவற்றை வியாபாரத்திற்குரிய கைத்தொழிற் பண்டங்களாகவும் செய்துவிற்று, தங்கள் தினசரி வருமானத்தில் சில காசுகள் கூடும்படி செய்துகொள்ள வேண்டுமென்று கிராமவாசிகளுக்குச் சொல்லுகின்றேன்.”

மகாத்மா காந்தி.

# ஆரம்பாசிரியர்கள் பிரான்சு போஸ்ட்மாஸ்டர்கள் வேலை செய்யக் கூடாதாம்

நமது இராஜதானியில் அநேக ஆரம்பாசிரியர்கள் தொன்று தொட்டு தங்கள் உபாத்திமைத் தொழிலுடன், தபாலாபீஸ் வேலையையும் தங்களுக்கு ஓய்ந்துள்ள நேரங்களில் பார்த்துக்கொண்டு அதற்காக மாதம் ஏதோ சொற்பத் தொகையைப்பெற்று ஜீவித்து வருகிறார்கள் என்பது வெளிப்படை. சிலஆசிரியர்கள் இத்தொழிலை கவுருவமெனக் கருதியும் இதை நடத்தி வருகிறார்கள். இது விஷயமாக தபால் அதிகாரிகள் டைரக்டர் துரையவர்களை அணுகி ஆரம்பாசிரியர்கள் (Extra Department) பிரான்சு போஸ்ட் மாஸ்ட்டர்களாக வேலை பார்ப்பதில் தனக்கு யாதொரு ஆட்சேபனையில்லையென இங்கு குறித்துள்ள நம்பரில் டைரக்டர் உத்திரவிட்டிருக்கின்றார்.

Dircetcor Proceetings.

Dis No. 7233/14 (24-10-1914)

Dis No. 390 (17-1-1912) இது இப்படியிருக்க திருநெல்வேலி ஜில்லாபோர்டு தலைவர் தங்கள் போர்டு உபாத்தியாயர்கள் எவரும் பிரான்சு போஸ்ட் மாஸ்ட்டர் வேலை பார்க்கக்கூடாதென்று உத்திரவிட்டதாகத் தெரிகிறது. இவ்வுத்திரவு மிகவும் நியாயமற்றதென்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் கல்வி சம்பந்தப்பட்ட டைரக்டர் துரையவர்களே இச்சிறு உத்தியோகத்தினால் கல்வி பாடசாலையில் எவ்வகையிலும் பாதிக்கப்படாதென நன்றாக ஆலோசித்து உத்திரவிட்டிருக்க ஜில்லா போர்ட் அதிகாரிகள் ஏன் இவ்வாறு அநீதியாக உத்திரவிட்டிருக்கின்றார்களென தெரியவில்லை. ஆசிரியர்களுக்கோ சரியான சம்பளம் கொடுக்க இவர்களுக்கு வழியில்லை வேறுவழியில் ஏதாகிலும் கொஞ்சம் பொருள் ஆசிரியர்கள் சம்பாரித்தால் அதற்கும் முட்டுக்கட்டை போடுவானேன்? தனக்கும் கொடுக்க வழியில்லை ஒருவர் கொடுப்பதையும் தடுப்பானேன். இவது விலக்கேல் என்றார் அவ்வைப் பிராட்டியார். தான் தருமம் செய்ய முடியாவிட்டாலும் பிறர் செய்யும் தருமத்தை தடுப்பது பெரும் பாவம் அல்லவா? ஏழை ஆரம்பாசிரியர்கள் மீது இப்போர்டு தலைவருக்கு ஏன் இவ்வளவு தயாள சிந்தனை. போர்ட் பாடசாலை ஆசிரியர்களின் கதி இந்த கதி

யென்றால், சில எய்டெட் பாடசாலையிலுள்ள ஆசிரியர்களையும் சில டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்கள் டைரக்டர் உத்திரவுகளை மீறியும் போஸ்ட் மாஸ்டர் வேலை பார்க்கக் கூடாதென உபத்திரவம் செய்து வருவதாக பல கடிதங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அன்னார்களுக்கு இந்த டைரக்டர் உத்திரவுகளைக் காட்டினால் நமது டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்கள் அவ்விதம் ஆசிரியர்களை துன்புறுத்த மாட்டார்கள் என்பது எமது துணிவு. அவ்விதம் சில கல்வியதிகாரிகளால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் டைரக்டர் துரையவர்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டால் நியாயம் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

## காலையில் எழுந்ததும் ஏன் உள்ளங் கையை பார்க்கவேண்டும்

ஒவ்வொரு நாளும் எழுந்ததும் பிறர் முகத்தில் விழிக்கக் கூடாதென்றும், தன் கையைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறுவதில் விசேஷ தத்துவம் பொழிந்து கிடக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தன் கைகளை நம்பியே வாழவேண்டும் பிறர் முகத்தை நோக்கி வாழக்கூடாது. மனிதனுடைய தலைவிதி அவனுடைய உள்ளங் கைக்குள் அடங்கியிருக்கிறது, என்ற உண்மையை வற்புறுத்துவதற்கே உள்ளங்கையை நாம் பார்க்கவேண்டும். உள்ளங்கை சங்கதிக்கு நாம் கூறுவது யுக்திப் பொருளல்ல அதுவே உண்மைப்பொருள். அதிகாலையில் துயில் நீத்ததும் "எத் கையே எனக்கு உதவி" என்ற பெரு நோக்குடன் நாள். தொடங்க வேண்டுமென்தே சித்தாந்தம். (குமார விகடன்.)

# துண்டு துணுக்கள்

## "பெய் என்றால் பெய்யும் மழை"

### ருஷியரின் செய்கை முறை

சோவியத் ருஷியர்கள் டிசம்பர் மாதம் 10-ம்தேதி ருஷிய துருக்கி ஸ்தானத்தில் 10-வது வருடக் கொண்டாட்டத் தினத்தைக் கொண்டாடுவார்கள். அதுசமயம் ருஷியர்கள் செயற்கை முறையினால் மழை பெய்விப்பது பார்க்கத் தகுந்த காட்சியாகவே இருக்குமாம். நன்றாக வெயில் காய்ந்துக்கொண்டிருக்கும் நாளில் ஆகாயவிமானக்கூட்டம் ஒன்று, 4200-அடி உயரம் ஆகாயத்தில் பறந்து சென்று, ஒருவித ரசாயனப்பொருளை ஆகாயத்தில் தூவும். அவை மேகங்களைச் சேகரித்து "ஜோ" வென்று மழை பெய்விக்கச்செய்யும். அவ்விதம் செய்வதற்கு முக்கிய காரணம் ஒன்றிருக்கிறது. மழையில்லாத அந்த ஊரில்கூட நினைத்தால் மழை பெய்விக்கமுடியும் என்பதை நிரூபிப்பதற்கும் மதப்பற்று மிகுந்துள்ள அந்த இடத்தில்—ஜனங்கள் சர்ச்சுகளுக்கும் மஸ்ஜீதுகளுக்கும் சென்று மழை பெய்விக்கச்செய்யும்படி பிரார்த்தனை செய்வதாயிருப்பதால் அங்கு நாஸ்திகப் பிரசாரம் செய்வதற்கும் மதப்பற்றைக் குறைக்க முயலுவதற்கும்தான் இந்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதாம். (குடி—அரசு)

### சுந்தராம்பாளுக்கு ஒரு லட்சம்

சென்னை அஸந்தாஸ் கிஷின் சந்த் தயாரிக்கப்போகிற ஒரு பேசும் படத்துக்கு, ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளிடம் ஒரு லட்ச ரூபாய் சம்பளம் பேசி ஒரு ஒப்பந்தமும் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. இந்திய ஸினிமா சரித்திரத்திலேயே ஒரு நடிகர் இவ்வளவு பெருந்தகை பெறுதல் இதுவே முதல் தடவையாகும். இவ்வம்மையார் நடிக்கப்போகும் முதல் படம் நந்தனார் சரித்திரமாகும். அதில் அவர் நந்தனாராக நடிக்கப்போகிறார் என தெரிகிறது.

* * * *

ஸ்ரீமதி குட்டன் நாயர் அம்மையார், அகில இந்திய பெண்கள் மகாநாட்டிற்குச்சென்று திரும்பும்பொழுது டில்லியில் மகாத்மா காந்தியைக்கண்டு கர்பத்தடை சம்பந்தமாக சில விஷயங்களைப்

பற்றிப் பேசினார், அப்பொழுது அவ்வம்மையார் "இளம் பிராயம் முதற்கொண்டே ஆண் பெண் பிள்ளைகளை முதியோர்களாகி படிக்கும் வரையில் ஒன்றாக கலந்து படிக்கச்செய்தால், தற்போது ஆண் பெண்கள் என பெரும் பேதம் மறைந்துவிடுமல்லவா, என காந்திமகானவர்களைக் கேட்டார்.

அதற்கு அவர் "அவ்விதம் கலந்து பழகி வருவதால் ஆண் பெண்கள் என்னும் பேதத்தன்மை மறைந்துவிடுமென திடமாக சொல்லமுடியாது. மேல் நாட்டில் இந்த முறையால் அநுகூலங்கள் எற்பட்டதாக தெரியவில்லை. சில வருஷங்களுக்கு முன்பு ஒரு வெராண்டாவில் ஆண் பெண் பிள்ளைகளை ஒன்றாகப் படுத்துத் தூங்கச்செய்தோம். நானும் என் மனைவியும் அவர்களோடே படுத்துக்கொண்டுவந்தோம். அப்படி பரிசோதித்து வந்ததில் பலவித குறைபாடுகள் காணப்பட்டன. என்று பதிலளித்தார். நமது நாட்டின் இந்த உண்மையை அறியாத சிலர் சாம்பியன் ஸ்கீம் போன்ற பல திட்டங்களில் கண்டுள்ள ஆண் பெண்கள் சேர்ந்து படிக்கலாமென்னும் முறையை ஆதரித்து வருவது குற்றமல்லவா.

ஜப்பானியர்களைப்போல் தேசபக்தியுள்ள மக்கள் என்னாட்டிலும் இல்லையென்பது உலகம் அறிந்த விஷயம். அது மாத்திரமல்ல, தங்கள் தாய் நாட்டிற்கு தாழ்வோ, அபாயமோ நேரிடுங்காலத்தில் தங்கள் உயிரை ஒரு பட்சியின் இறகின் கனத்தைக்காட்டிலும் மெல்லியதாக நினைக்கின்றார்கள். இந்த ஒரு அருமையான குணம் தான் ஜப்பான் தேசத்தை உலகத்தில் ஒரு சிறந்த நாடாக விளங்கும்படிச்செய்ய காரணமாயிருக்கிறது. (டாக்டர் டிஜ்மில் டனே)

# ஆரம்பக்கல்வி திருத்த மசோதா சட்டசபையில் சட்ட மாக்கப்பட்டது

ஜனவரி மாதத்தில் நடந்தேரிய சட்டசபையில் மேற்குறித்த மசோதாவானது சட்டமாக்கப்பட்டது அதில் முக்கியமாக ஜில்லா கல்விச்சபைகள் செய்யும் தீர்மானத்தை டைரக்டர் துரையவர்கள் தானாகவே ரத்துசெய்யவோ மாற்றவோ அவருக்கு அதிகாரம் கொடுக்க (Seleec Committee) ஸெலக்ட் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதை திரு. கிருஷ்ணய்ய சவுத்திரியவர்கள் டைரக்டர் துரையவர்கள் கல்விச்சபைகள் செய்யும் தீர்மானங்களை மாற்றுவதற்கும், ரத்துசெய்வதற்கும் முன்பாக, அவர் அவ்விதம் செய்வதற்கு தக்க காரணங்களை ஜில்லாக் கல்விச் சபைகளுக்கு தெரிவித்து அவர்கள் அபிப்பிராயங்களை வாங்கின பிறகுதான் அவர் உத்திரவுசெய்யவேண்டுமென ஓர் திருத்தம் கொண்டுவந்தார். அதை கனம் மந்திரியவர்கள் ஒப்புக்கொண்டார்.

மக்கள் சுவதந்திரமும், அதிகாரமும் வேண்டுமென போராடும் இக்காலத்தில், கனம் கல்வி மந்திரியவர்கள் ஜில்லாக் கல்விச்சபைகளுக்கு அதிகாரத்தை அதிகமாக்குவதைவிட்டு அதிகாரிகளுக்கு ஆதிக்கத்தை உயர்த்தி கல்விச்சபைகளுக்கு தற்போதிருந்த சுவதந்திரத்தை குறைத்தது மிகவும் வருந்தத்தக்க விஷயம். 1920-ம் வருடம் முதற்கொண்டு கல்வி மந்திரிகளாக இருந்த திருவாளர்கள் சுப்பராய ரெட்டியார், ஸர், A. P. பாத்ரோ, டாக்டர் சுப்பராயன் முதலியவர்கள் கல்விச்சபைகளுக்கு ஆதிக்கத்தை உயர்த்தி, பணத்தையும் ஏராளமாகக்கொடுத்து ஆரம்பக்கல்வியை வளர்த்து வந்தது ஒவ்வொரு ஆரம்பாசிரியர்களும் அறிந்த விஷயம். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியைச்சேர்ந்த திரு. குமாரசாமி ரெட்டியார் மந்திரியாக வந்தநாள்முதல் ஆரம்பக்கல்வி இருக்கும் நிலையும், ஆசிரியர்கள் படும் பாடும் வாசகர்களே அறிவர். பண்டிதர்கள் ஒரு பக்கம் பறக்கின்றனர். ஆரம்பாசிரியர்கள் அரைக்கஞ்சிக்கும் வழியில்லையென கதருகின்றனர். பிராம்மணர் அல்லாதார்களின் பெயரினாலும், ஜஸ்டிஸ் கட்சியின் பெயரினாலும், மந்திரி உத்தியோகங்களை பெற்றுக்கொண்டு தற்போதிய மந்திரிகள் பிராம்மணர் அல்லாதவர்களுக்கு என்ன நன்மை செய்தார்களென்பது தெரியவில்லை. உபாத்தியாயத் தொழில் புரியும் மக்களில் சுமார் 100-க்கு

# காந்திஜீயும் ஆரம்பாசரியரும்

மஹாத்மா காந்தியடிகள் டில்லியிலிருக்கும் பொழுது நடந்த ஓர் சம்பவம். ஓர் ஆரம்பாசிரியர் ஒரு கிராமவாசியைப்போல் உடை அணிந்துகொண்டு தான் காந்தியவர்களை குறைந்தது ஒரு நிமிஷமாவது பகலில் பேச அனுமதிவேண்டுமென்றும், தன்னிடத்தில் ரூ. 1000-இருப்பதாகவும் அதை அவழிக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்றும் தெரிவித்தார். இதை அங்கிருந்த எவரும் நம்பவில்லை. ஆயினும் அவர் அபிப்பிராயப்படி காந்தஜி சற்று ஓய்ந்திருக்கும் சமயத்தில் இவரை அவர் உட்காந்திருக்கும் மாடியின்மீது அழைத்துப்போயினர். காந்திஜியைக் கண்டதும் அவர் வணங்கி காந்தியின் முன்பாக 10-நூறு ரூபாய் நோட்டுகளை எதிரே வைத்துவிட்டு "இதை உண்மையாக வறுமையில் வாடும் மக்களுக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். இதை ஏழை மக்களுக்கு அறிந்து கொடுக்க நீங்களே அருகர்" என்றார்.

காந்தி:—நல்லது இப்பணத்தை தாங்கள் எத்தனை நாட்களாக சேமித்து வைத்தீர்கள்.

பெரியவர்:—இவை பல நாட்களாக சேமித்துவைத்தது. 100-ரூபாய்களை பீஹார் பூகம்ப பண்டிற்குக் கொடுத்தேன். 100-ரூபாய் அஸ்ஸாம் ஏழைகளுக்கு கொடுத்தேன். 4-வருஷங்களுக்கு முன்பு அலகாபாத்திலுள்ள ஏழைக் குடியானவர்களுக்கு ரூபா 500-கொடுத்திருக்கிறேன்.

காந்தி:—மிகவும ஆச்சரியங்கொண்டவராய், "ஐயா, உம்முடைய சம்பளமென்ன? உமக்கு இப்பொழுது என்ன பென்ஷன்? நீங்கள் என்னவேலையிலிருந்தீர்கள்.

பெரியவர்:—நான்ஒரு பாடசாலை உபாத்தியாயர். பல ஆண்டுகள் உழைத்து வேலையைவிட்டு நீங்கினேன். நான் வாங்கின கடைசீ சம்பளம் ரூபா 52-0-0, எனக்கு பென்ஷன் கிடையாது. ஆனால் எனக்கு (Gratuity) ரூபா 2700 கொடுத்தார்கள்.

காந்தி:—தாங்கள் வேலையைவிட்டு நீங்கி எத்தனை வருஷங்

---

75-பேர்கள் பிராம்மணர் அல்லாதார்களே யொழிய பிராம்மணர்களல்ல. இவர்களுக்கு இப்பிராமணரல்லாத மந்திரிகள் என்ன சாதித்தார்கள். பிராம்மணரல்லாதாரெல்லாம் காங்கிரசுக்கு ஓட்டு செய்தார்களென்றால் ஏன் செய்யமாட்டார்கள்? இதற்கு இவர்கள் ஓல மிடுவானேன்!

(பிராம்மணரல்லாதார்)



கள் ஆயின? உமது வாழ்க்கைக்கு எவ்வளவு செலவுசெய்து வருகிறீர்கள்.

உபாத்தியாயர்:—ஒரு சிறு ரொட்டித்துண்டும் கொஞ்சம் பருப்பும் இருந்தால் எனக்கு போதுமானது. வெகு எளிய வாழ்க்கையில் வாழ்ந்துவருகிறேன். எனக்கு மாதம் ரூபாய் 10-இருந்தால் போதுமானது. நான் காப்பாற்றவேண்டியவர்கள் எனக்கு எவருமில்லை. என் அண்ணன் பிள்ளைகளை காப்பாற்றி படிக்க வைத்துவிட்டேன். இப்பொழுது நான் நிராபாதி. நான் இலவசமாக ஒரு ஸமஸ்கிருத பாடசாலையொன்றை வைத்திருக்கிறேன். எனது கால முழுதையும் அதில் கழித்து வருகிறேன்.

காந்தி:—உனது சிறு வருமானத்திலிருந்து சில ஆயிரங்களை நீ சேமித்துவந்திருக்கிறாய். அத்தொகையையும் ஏழைகளுக்கு அர்ப்பணம் செய்துவருகின்றாய். இது ஒரு பெரிய புண்ணியமான காரியமாகும். இது விஷயத்தை உன்னைப்போற் ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு இந்திய மக்களும் உன்னிடத்திலிருந்து தெரிந்துக்கொள்ளும்படி விரும்புகின்றேன்.

உபாத்தியாயர்:—எனக்காக வேண்டிய ஒரு சிறு அளவே நான் செலவு செய்கின்றேன். மிகுந்ததை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகின்றேன். இன்னும் என்னிடத்தில் சேகரித்த பணம் கொஞ்சம் இருக்கிறது. இன்னொருமுறை தங்களை வந்து காணும்பொழுது அத்தொகையை கொடுக்கின்றேன். என்று காந்திமகானின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு குதூகலத்துடன் சென்றார்.

இத்தகைய பெருந்தியாக புத்தியுள்ள ஆரம்பாசிரியர்கள் வட நாட்டில் இருப்பதினால்தான் எல்லா வகையிலும் வடநாடு முன்னேற்றமடைந்திருக்கிறது. ஆரம்பாசிரியர்களும் பலவகையில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். நமது தென்னாட்டிலோ ஆயிரக் கணக்கான உபாத்தியாயர்களிலிருந்தும் மேற்குறித்த உபாத்தியாயர்கள் இருக்கின்றார்களா என்பது நமது கேள்வி. தியாகமென்பதே நமது தென்னாட்டு ஆசிரியர்களுக்கு பெரும்பாலும் கிடையாதென கூறலாம். ஒரு பத்திரிகை வாங்க பணம் கிடையாது. சங்கங்களுக்கு மாதம் சந்தா அரையணா சரிவர கொடுக்க பணம் கிடையாது. கேட்டால் நாங்கள் சம்பாதிப்பது

# கட்டாய கல்வியா, அல்லது கல்வி மறுப்பா

(ரரமசாமி - செங்கோட்டை)

சென்னை சட்டசபையில் கல்வி மந்திரி ஆரம்பக்கல்வி மசோதாவிற்கு ஓர் திருத்தம் கொண்டுவந்தார். இத்திருத்தம் கொண்டு வருவதற்கு காரணம் சென்னையில் கட்டாய கல்விச்சட்டம் இருப்பதால் பெற்றோர்கள் தமது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி கொஞ்ச காலத்திற்குள் பிள்ளைகளை நிறுத்திவிடுவதால் அவர்களது படிப்புக்காக செலவிடப்பட்ட பணம் வீணாகிறது என்றும் வீண் கூட்டம் போடுவதில் பயனில்லை என்றும் நமது அமைச்சர் அவை நினைக்கிறது. ஆகவே பள்ளிக்கூடத்துக்கு கட்டாயப்படுத்தி குழந்தைகளை கொண்டு வருவதைவிட பள்ளிக்கூடத்திற்குவந்து இடையே படிப்பை நிறுத்தும் குழந்தைகளின் பெற்றோரை தண்டித்தால் போதும் என்பது இப்போதைய திருத்த மசோதாவின் நோக்கம்.

இப்போது பள்ளியில் இரண்டு மூன்று வருஷங்கள் படித்த பிள்ளைகள் எழுத்துக்களைப்பற்றியும், வாசிக்கவும் சிறிதளவு தங்கள் சுயபாஷையில் தெரிந்துகொள்வதால் பிற்காலத்தில் தாங்களே படிக்கவும், எழுதவும் சமர்த்தர்களாய் விடுகின்றார்கள். அப்படியிருக்க குழந்தைகளுக்காக செலவிடப்படும் பணம் வீண் செலவு என்று கல்வி மந்திரி கருதுவது நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்காக மந்திரியார் கண்டுபிடித்துள்ள பரிகாரம் வியாதியைவிட கொடுமையானது. எவ்வாறெனில் வியாதி பூரணமாக குணமாகும் வரையில் மருந்து சாப்பிடுவதாக ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தாலொழிய ஆஸ்பத்திரிகளில் மருந்து கொடுக்கமுடியாதென்று சொல்வதற்கும் சர்க்காரின் புதிய சட்டத்திற்கும் அதிக வித்தியாசமில்லை.

குழந்தைகளை பள்ளிக்கு வரும்படி செய்வதுடன் தொடர்ந்து படிக்கும்படி செய்யவேண்டும் என்று சென்னை கல்வி அதிகாரி

---

கொஞ்ச சம்பளம் எங்கிருந்து கொடுப்பதென்பார்கள். மேற்குறித்த சம்பாஷணையைப் படித்த பிறகு நமது ஆரம்பாசிரிய சகோதரர்கள் என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை.



சட்டசபையில் கூறினர். இதில் முதல் அம்சம் நடக்கமுடியாதபடி தடுத்தால் அதாவது பெற்றோர்களை முதலிலேயே புதுசட்டத்தின்படி பயமுறுத்திவிட்டால் பிறகு வேலை சுலபமாய்விடும் என்பது சர்க்கார் நினைப்புபோலும். குழந்தைகளை இடையே பெற்றோர்கள் நிறுத்திவிடுவதற்கு உண்மையான காரணங்களை கண்டுபிடித்து அதற்கு தக்க பரிகாரங்களை தேடாமல் சட்டங்களை இயற்றுவதால் யாதும் பயன்படாது. இத்தேசம் கல்வியின் அவசியம் உணராதது அல்ல. குழந்தைகளை அரைகுறையாய் நிறுத்துவதன் காரணம் பெற்றோர்களின் தரித்தரம் ஒருபுறமிருக்க தங்கள் குழவிகளையே காப்பாற்ற சக்தியற்றவர்களாய் 'யிருக்கின்றார்கள். இந்நிலையில் வற்புறுத்தி தண்டனை விதித்தால் இது ஆகக்கூடிய காரியமா. மேலும் கட்டாய கல்விச்சட்டம் இயற்றியதில் இதை மீறிய பெற்றோர்களை எத்தனைபேரை தண்டனைக்குட்படுத்தினார்கள் என்பதை மந்திரியார் சமர்பிக்கமுடியுமா? அவ்வாறு எங்கேயாவது தண்டனைக்குட்படுத்தியதை நிரூபிக்கமுடியுமா? ஆகையால் சர்க்காருக்கு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்க்கு சிரமம் ஏற்படாமல் இருக்கும்படி செய்தால் தான் புதிய சட்டம் நியாயமாகும்.

இதைப்பற்றி கல்வி மந்திரி சட்டசபையில் பேசியபோது "பெற்றோருக்கோ, மாணவருக்கோ உதவிசெய்யும் விஷயத்துக்கு தனி சட்டம் வேண்டியதில்லை. ஆனால் பெற்றோரை கட்டாயப்படுத்த சட்டம் தேவை" என்று கூறினர். அப்படியானால் இவ்வாறு உதவிசெய்வதற்கு சர்க்காரோ அல்லது ஸ்தலஸ்தாபனங்களோ தயாராக இல்லாத வரையில் இச்சட்டம் அமுலுக்கு வராது என்று கல்வி மந்திரி உறுதி கூறுவாரா?

மேற்சொன்னவாறு செய்யாவிடில் இச்சட்டம் சரியாக வேலைசெய்யாமல் ஏட்டுச்சுரைக்காயாகபோகும். சக்தியற்ற பல பெற்றோர்கள் தமது குழந்தைகளை பள்ளிக்கே அனுப்பமாட்டார்கள். பெற்றோரை தண்டிக்கும் பொறுப்போ ஸ்தலஸ்தாபன தலைவரிடம் இருக்கிறது. இவர்கள் தங்களுக்கு ஓட்டு கொடுக்கும் பெற்றோர்களுக்கு அபராதம் போடத் தயாராய் இருப்பார்களா என்பது சந்தேகம். ஆகையால் ஏழை குழந்தைகளை கூடுமானவரையில்

# கிண்டர் கார்டன்

## (குமுதம்-சென்னை.)

கிண்டர் கார்டன் என்னும் சொல்லை கிண்டர் என்றும் கார்டன் என்றும் பிரித்தால், கிண்டர் என்றால் குழந்தை கார்டன் என்றால் தோட்டம். அதாவது குழந்தை தோட்டம் என்று பொருள்படுகிறது. இவ்வித பொருளானது கீழ்வரும் காரணங்களால்குழந்தைகளைப்பற்றியகூட்டங்களுக்கு தகுதியாகிறது. ஒரு தோட்டக்காரன் தன் தோட்டத்தில் பூ வகைகளையும், காய் வகைகளையும், தானிய வகைகளையும், பயிரிடும் காலத்தில் அவை சரிவர பலனை கொடுத்தபோது சந்தோஷப்படுகிறான். அது சரியான பலனை தாராதபோது அவைகளை வெட்டியோ அழித்தோ எறியாமல், எரு, மண் முதலியவைகளை போட்டோ, ஜலத்தை சரிவர பாய்ச்சியோ, களை நன்றாக எடுத்தோ அல்லது வேறுவித சரியான பக்குவங்களை செய்து அதன் வளர்ச்சியை கவனித்து மகிழ்கின்றான். அதுபோல குழந்தைகளுக்கு உபாத்தியாயர்கள் போதிக்கும் காலத்தில் குழந்தைகளுக்கு விஷயம் விளங்காவிடில் அன்னவர்மீது கோபங்கொண்டு, அடித்து ஹிம்சிக்காமல் தக்க சாதனங்களை கொண்டு போதித்து பிள்ளைகளின் விருத்தியைக் கண்டு சந்தோஷிக்க வேண்டும் என்ற, நோக்கம் கொண்டே கிண்டர் கார்டன் என்ற பெயர் அழைத்தார்கள் போலும்.

உபாத்தியாயர்கள் குழந்தைகள் அறிவு விருத்திசெய்ய அவர்களுடைய உணர்ச்சி, பிறப்பு, பழக்கம், பேச்சு முதலியவைகளுக் கிணங்கி நடக்க முயலவேண்டும். உலகில் குழவிகளைப் பெற்று பரிபாலிக்கும் பாக்கியவந்தர்கள் அன்னவர்களை அழைத்

---

பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமலிருக்கும்படி பிரசாரம் செய்வதே இவர்கள் வேலையாய்விடும். ஆகையால் இப்புதிய திட்டம் கல்வி மறுத்தல் திட்டமாக போகுமன்றி கட்டாய கல்வி திட்டமாக ஒருநாளும் மாறாது என்பது எமது அபிப்பிராயம். இதற்கு பதிலாக வேறு ஒரு முறையை யாரும் சொல்லவில்லை என்று கல்வி மந்திரி கூறினார். இது யாரிடம் கற்றாரோ தெரியவில்லை. பிற்போக்கான திட்டத்தை புகுத்துவதைவிட புகுத்தாமல் இருத்தல் மேலன்றோ? இதை ஏன் நம் மந்திரியார் தெரிந்துகொள்ளவில்லை.



துக்கொண்டு சந்தை புலங்களுக்குகோ, சாவடிகள் மேடைகட்கோ, மந்தைவெளிகளுக்கோ மலர்மிகுங்காவினுக்கோ கடற்கரை பக்கங்களுக்கோ, காட்சிமிகும் ஆறுகட்கோ, தெண்டனிடுந் தண்டுகட்கோ, தேவர்கள்வாழும் கோயிலுக்கோ, போகும் வழியில் பார்க்கும் காட்சிகளைப்பற்றியும், செடிகளைப்பற்றியும் கொடிகளைப்பற்றியும், கடைகளைப்பற்றியும் தெரிந்துகொள்ள கேட்கும் பல வினாக்களுக்கு விடையளித்தால் சந்தோஷப்படுகின்றனர். அக்காலங்களில் பல விஷயங்களை போதிப்பதற்கு ஏற்ற தருணமாகிறது. குழந்தைகள் அறிவும் விசாலப்படுகிறது. குழந்தைகளுக்கு தாங்களே ஒரு வஸ்துவை செய்யவேண்டும் என்கிற ஆசையிருப்பதால் அதற்கிணங்க மணல் வேலை, கட்டை வேலை, மணி வேலை முதலியவைகள் நடைபெறுதல் நல்லது. மேலும் குழந்தைகளுக்கு ஒரு பொருளை உடைத்தும், கிழித்தும் வாசனைப்பார்த்தும், பரீக்ஷிக்கும் குணம் அமைந்துள்ளதால் அதற்கனுகூலமாக பரிசோதனைப் பாடங்களை அமைத்துக்கொள்ளலாம். பாட்டின்மேல் பிள்ளைகளுக்கு பிரியம் இருப்பதால் பாடங்களை பாட்டில் சம்பந்தப்படுத்தி பாடச்செய்யலாம்.

உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடங்களில் தனக்கு எவ்வித விசனங்களோ, குறைகளோ யிருந்தாலும் காட்டிக்கொள்ளாமல், தெம்பாகவும், ஆனந்தகரமாகவும், இருக்கவேண்டும். கடூரமான பயங்கர தொனிகளிடாமல் சாந்தமாக இனிய குரலுடன் பேசல் வேண்டும். பிள்ளைகளோடு தானும் ஒரு பிள்ளையாய் இருந்து பழக வேண்டுமே யல்லாது பிள்ளைகள் பயப்படத்தக்கவாறு நடந்துக் கொள்ளக்கூடாது. தங்கள் வீட்டைவிட பள்ளிக்கூடமே சந்தோஷம் தரத்தக்க இடம் என்று எண்ணும் வாறு பழகவேண்டும். உபாத்தியாயர்கள் சாதாரணமான சுத்த ஆடைகளை தரிக்கவேண்டுமே தவிர கண்களை கவரக்கூடிய வர்ணம் தீட்டிய ஆடைகளை அணிவதால் அவர்கள் கவனம் ஆடையைப்பற்றி நிற்கும். குப்பை கூளங்களை கண்டபோது அருவருப்படைவதுபோல் நடித்துக் காட்டவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் ஒரே பாடத்தை ஓரே மாதிரி அதிக நேரம் நடத்தக்கூடாது. எப்பாடமாயினும், 30-நிமிஷத்துக்குமேல் போனால், கவனம் குறைவதோடு அயர்ந்து விடுவார்கள். குழந்தை

# என்னதான் நோக்கம்?

கல்வியின் நோக்கம் என்ன?

1. மாணவன், புத்தகமே என்கிறான்.
2. பண்டிதன், அறிவு என்கிறான்.
3. உபதேசி, ஒழுக்கம் என்கிறான்.
4. சாஸ்திரி, வேத பாராயணம் என்கிறான்.
5. வேதாந்தி, சத்யதரிசனம் என்கிறான்.
6. கலைஞன், சௌந்தரியம் என்கிறான்.
7. போகி, சந்தோஷம் என்கிறான்.
8. துறவி, புலனடக்கம் என்கிறான்.
9. கிருஸ்தவன், ஆத்மத் தியாகம் என்கிறான்.
10. ராஜீய வாதி, சுய ஆட்சி என்கிறான்.
11. ராஜதந்திரி, ஒத்துழைப்பு என்கிறான்.
12. மன்னன், ராஜபக்தி என்கிறான்.
13. தேச பக்தன், தேசபக்தி என்கிறான்.
14. நீதிபதி, நீதி என்கிறான்.
15. கிழவன், ஞானம் என்கிறான்.
16. இளைஞன், சம்பாத்யம் என்கிறான்.
17. போர் வீரன், தீரம் என்கிறான்.
18. பத்திராசிரியன், வெற்றி என்கிறான்.
19. முதலாளி, திறமை என்கிறான்.
20. சர்வ்காரி, செல்வம் என்கிறான்.

---

களுக்கு பாடம் ஆரம்பிக்கும் முன்பு, சந்தடிசெய்யாமல், கவனிக்க வேண்டிய பொருப்புக்காக உபந்நியாசம் செய்யாமல், பக்குவமாய் பாடத்தை ஆரம்பித்து சந்தடியை அடக்கிவிடவேண்டும். வகுப்புகளில் கேள்விகளை முதலில் விடுத்து பிறகு பிள்ளைகளை குறிக்க வேண்டும். அதுவும் வரிசை கிரமமாக குறித்தல் கூடாது, குழந்தைகள் ஏதாவது பிசகு செய்துவிட்டால் அவர்களுடைய வயது, உணர்ச்சி, பழக்கம் முதலியவைகளை அறிந்து காலதேச வர்த்தமானங்களை தெறிந்து சிக்ஷிக்கவேண்டும்.



21. கணவன், மனோராஜ்யம் என்கிறான்.
22. குழந்தை, விளையாட்டு என்கிறது.
23. கன்னிகை, காதல் என்கிறாள்.
24. புருஷன், வேலை என்கிறான்.
25. நேசன், நட்பு என்கிறான்.
26. வாத்தியார், வசிகரம் என்கிறார்.
27. வைத்தியன், ஆரோக்கியம் என்கிறான்.
28. உயிர் நூற்புலன், வளர்ச்சி என்கிறான்.
29. மனோதத்துவ சாஸ்திரி, மனவிகாசம் என்கிறான்.
30. சமுதாய சாஸ்திரி, ஒற்றுமை என்கிறான்.

ஆனால், உண்மைக் கல்வி போதகன் இவையாவும், இவற்றிற்கு மேலே பல விஷயமும் சேர்ந்தே கல்வியின் நோக்கமாயிருக்கவேண்டும் என்கிறான். (சு - ச)

# சிறுவர் பகுதி

## கதையும் பாட்டும்

### குறும்பு செய்யேல்

வங்காள தேசத்தில் ஓர் வில்லியம்ஸ் என்னும் பெயருடைய துரை ஒருவன் இருந்தான் அவன் ஓர் யானைக்குட்டியொன்றை அன்பாக வளர்த்துவந்தான். யானைக்குட்டியும் எஜமானனிடம் அன்புடன் நடந்துவந்தது. எஜமானன் சாப்பிடும்பொழுது தானும் அவர் அறைக்கருகே சென்று, ஜன்னல் வழியாய் தன் தும்பிக் கையை நீட்டுவது வழக்கம். அவர் அதிக பிரியமுடன் தன் மேஜை யின் மீதுள்ள சில பழங்களை கொடுத்துவருவார். அதைப் பெற்றுக் கொண்டு அந்த யானைக்குட்டி உல்லாசமாக அவரது தோட்ட முழுதும் உலாவிவரும்.

அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது சம்பந்தமாக அவர் தன்னுடைய தோட்டத்தில் ஓர் விருந்து நடத்தினர். பல நண்பர்கள் வந்திருந்தனர். அப்பொழுது இந்த யானைக்குட்டி வழக்கம்போல் தன் எஜமானனிடம் சென்று தன் தும்பிக்கையை நீட்டி சில பழங்களைக் கேட்டது. அவர் அதை அன்புடன் தடவிக் கொடுத்து சில பழங்களைக் கொடுத்தார். அதை வாங்கி தின்பதற் காக திரும்புவதற்குள், பக்கத்திலிருந்த ஒருவன் தான் சாப்பிடும் காண்டி முள்ளினால் அதன் துதிக்கையில் குறும்புத்தனமாக குத்தினன். அதற்கு பாதை பொருக்கமுடியவில்லை.

உடனே அந்த யானைக்குட்டி அருகேயுள்ள ஒரு மரத்தி னிடம் சென்றது. அதிக விஷமுள்ள கருப்பு எறும்புகள் அம்மரத் தின் கிளையொன்றில் புற்றாக இருந்தன. உடனே அந்த புற்றுடன் அந்தக் கிளையை தன் தும்பிக்கையால் உடைத்துக்கொண்டு வந்தது குறும்பாக தன்னை முள்ளால் குத்தினவன்மீது உதரிவிட்டது.

மேலே விழுந்த எறும்புகளெல்லாம் உடல் முழுதும் அங்கு மிங்கும் ஓடி அவனை கடிக்க ஆரம்பித்தன. பாதை பொருக்க முடி யாமல் அக்குறும்பன் தன் உடைகளையெல்லாம் கழற்றி எறிந்து விட்டான். அப்பொழுதும் உடம்பில் எறிச்சல் அடங்கவில்லை. உடனே அவன் அங்குள்ள ஒரு குளத்தில் குளித்துவிட்டு ஓசீ



விட்டான். ஆகையால் பிள்ளைகளே நாம் ஒருவருக்கும் குறும்பு செய்யக்கூடாது.

### பாட்டு

துரை ஒருவன் யானைக்குட்டி ஒன்று வளர்த்தான்
அறைக்குள் சென்றால் அதற்கு தின்ன பழங்கள் தருவான்
ஓர் தினமவன் நேயருடன் விருந்து உண்கையில்
பார்த்துவந்து தும்பிக்கை நீட்டி கேட்ட தவைகளை
கொடுத்த சில பழங்களை தின்பதற் குள்ளாக
அதிலொருவன் காண்டிமுள்ளால் குத்தினனையா
கதரி சென்று எறும்பு கூட்டை ஓர்கிளையுடைத்து
உதரினதே அவ்வெறும்புகள் எங்கும் கடிக்க
துடைக்க துடைக்க அவ்வெறும்புகள் எங்கும் கடிக்க
உடை கழட்டி குளித்துவிட்டு ஓடினனையா.

---

### சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

நமது பத்திரிகைக்கு 2-வது ஆண்டு வரும் மார்ச்சு 1935-ம் வருடத்துடன் முடிவடைகிறது. ஏப்ரல் மாதம் முதற்கொண்டு 3-வது வருடம் ஆரம்பமாகிறது. இன்னும் அநேக சந்தாநேயர்கள். இரண்டாவது வருட சந்தா தொகையை கொடுக்காமலேயிருக்கின்ற னர். பத்திரிகையை மாதா மாதம் ஒழுங்காக அனுப்பிவைக்க பல ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றோம். பழைய சந்தாதார்கள் தங்களுடைய சந்தா தொகையை அனுப்பிவைப்பதல்லாமல் ஒவ் வொருவரும் குறைந்தது 2-புதிய சந்தாதாரரையாவது சேர்த் தனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

# தாரமங்கலம் சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்கம்

12-1-35 க் தேதி ஓமலூர் ரேஞ்சு டிப்டி இனிஸ்பெக்டர் மகா. ள-ள-ஸ்ரீ P. வைத்தியநாதய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்தார் அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவையாவன :—

1. சேலம்ஜில்லா ஓமலூர்ரேஞ்சு கனம் டிப்டி இனிஸ்பெக்டரவர்கள் தங்களாபீசு 8-11-33 ந்தேதிய நெ 521/33 கடிதத்தில் டை சேஞ்சில் வேலை செய்துவரும் அதிக சர்வீசும் சர்டிபிகேட் பூர்த்தி செய்தவர்களுமான சில ஆரம்ப ஆசிரியர்களை காயம் செய்யும்படி முன்னிருந்த கனம் ஓமலூர் த்தாலூக்கா போர்டு பிரசிடெண்டவர்களுக்கு சிபாரசு செய்திருந்தும் டை சிபார்சு லட்டரை உடனே கவனிக்கப்படாமல் காலதாமதமாக 1934-ம் வருஷம் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் காயம் செய்யப்பட்டதால் பின்பு கனம் சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்கள் தங்களாபீசு 14-5-34க் தேதிய லெட்டர் நெ 3809 உத்திரவில் ரத்து செய்ததுமல்லாமல் அவர்களின் சம்பளமும் குறைக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் கனம் டிப்டி இனிஸ்பெக்டர் அவர்கள் சிபார்சு கடிதத்தில் கண்ட ஆசிரியர்களை காயம் செய்து அவர்களுக்கு அப்பொழுது கொடுக்கப் பட்டிருக்கும் உயர்வு சம்பள விகிதத்தையே கொடுத்து ஆதரிக்கவேண்டுமாய் கனம் சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களையும் கல்வி அதிகாரி அவர்களையும் கேட்டுக் கொள்ளலாமாக Mr. S. V. பிச்சுமணி அய்யர் அவர்களால் பிரேரேபித்து Mr. V. கோபாலய்யா அவர்களால் ஆமோதித்து எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

T. P. ராஜகோபாலன்
காரியதரிசி,


# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது)

| | |
|---|---|
| இரண்டாம் பாகம் ... ... | 0—1—6 |
| மூன்றாம் பாகம் ... ... | 0—1—6 |
| நான்காம் பாகம் ... ... | 0—1—6 |
| சித்ரபால சிக்ஷை ... ... | 0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | |
|---|---|
| முதல் வகுப்பு ... ... | 0—2—0 |
| இரண்டாம் ,, ... ... | 0—3—0 |
| மூன்றாம் ,, ... ... | 0—3—6 |
| நான்காம் ,, ... ... | 0—4—0 |
| ஐந்தாம் ,, ... ... | 0—4—6 |

## POETICAL SELECTIONS

(Approved by the Text Book-Committee)

| | |
|---|---|
| FIRST BOOK For I Form | 0—3—0 |
| SECOND ,, II ,, | 0—3—0 |
| THIRD ,, III ,, | 0—4—0 |
| VENKATARAM'S Ist Primer | 0—2—0 |

286, சைனாபஜார் ரோட்,
(அப்பா கட்டிடம் மேல்மாடி)
ஜி. டி. மதராஸ்.

# லக்ஷ்மீ நாராயண தைலம்

## உள்ளுக்கும் மேலுக்கும் நிர்ப்பயமாய் உபயோகப்படுத்தும் ஓர் பரம ஔஷதம்

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூவகைத் தோஷங்களின் ஏற்றக் குறைச்சலினல் ஏற்படும் அனேக வியாதிகளுக்கும், உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகமாகும் தேவாமிர்தம் போன்ற ஓர் பரம ஔஷதம். மனிதர்களுக்குச் சிசுமுதல் பாதம் வரையில் ஏற்படும் சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே ஔஷதம் போதுமானது. பாலர், யௌவனர், விருத்தர் முதலிய ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும் உண்டாகும் எப்படிப்பட்ட வியாதிகளுக்கும் உள்ளுக்கும் மேலுக்கும் நிர்ப்பயமாய் உபயோகித்து நிமிஷத்தில் குணமடையலாம். இதற்கு விசேஷ பத்தியமாவது, அனுபானமாவது கிடையாது. இந்த ஔஷதத்தைத் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணமடையலாம். ஆபத்தான வியாதிகளுக்கு உபயோகித்த அந்த க்ஷணத்திலேயே மந்திர சக்தியைப்போல் குணங்காணலாம். இம்மருந்து எந்த வீட்டில் இருக்கிறதோ, அந்த வீட்டில் சித்த வைத்தியர் ஒருவர் இருப்பதாக நினைத்துத் தைரியமாயிருக்கலாம்.—

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—சகல சுரங்கள், பிளேக், பேதி, காலரா, தலைப்பாரம், தலைவலி, தலை சுற்றல், ஜலதோஷம், மார்சளி, இருமல், தொண்டைக்கம்மல், சுவாஸகாஸம், அஜீர்ணம், புளியேப்பம், மந்தம், வயிற்றுப் போக்கு, வயிற்றுப்பிசம், வயிற்றிரைச்சல்; ஜன்னி, சீதளம், பித்தமயக்கம், கைகால் பிடிப்பு, பார்ஸவாய்வு, அண்டவாய்வு, குத்தல், குடைச்சல், வாதரோகம், குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், ஜன்னி இழுப்பு, கக்குவாய் இருமல், ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு, சூதக ஜன்னி முதலியவைகளும் இன்னும் அனேக வியாதிகளும். இம்மருந்தின் முழுக்குணங்களையும் விவரிக்க இடம் போதாததால் சுருக்கமாய்த் தெரிவித்திருக்கிறோம்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—12—0

விலாசம்:—மலையாள வைத்திய நிலையம்,
தபால் பெட்டி நெம்பர் 53. மதராஸ்.

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார்]

முதற் புத்தகம் .... 0 2 6
இரண்டாம் ,, .... 0 3 0 மூன்றாம் ,, .... 0 4 6
நான்காம் ,, .... 0 5 6 ஐந்தாம் ,, .... 0 6 6

## பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

முதற் புத்தகம் 0 5 0 மூன்றாம் புத்தகம் 0 8 0
இரண்டாம் ,, 0 6 0 நான்காம் ,, 0 9 0

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் 0 5 0
6-ஆம் ,, இரண்டாம் புததகம் 0 6 0

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ., எல். டி.]

4-ம் வகுப்பு முதற் புத்தகம் 0 4 0
5-ம் ,, இரண்டாம் புத்தகம் 0 5 0

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் ஏ, ஐ. எஸ்.]

4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் 0 4 0
5 ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் 0 5 0

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் 0 5 0
5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் 0 6 0
6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் 0 7 0

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்பந்த முதலியார்)

4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் 0 2 0
,, அதிபத்த நாயனர் 0 2 0
,, ஏனாதிநாத நாயனர் 0 3 0
,, நந்தனர் 0 5 0

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
16. சம்புதாஸ் தெரு, ஜி. டி. மதராஸ்.

## எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. எ. எல். டி. இயற்றியவை.

### கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். எ. இயற்றியவை.

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு .... 0 2 0

இரண்டாம் வகுப்பு 0 3 0 நான்காம் வகுப்பு 0 5 0

மூன்றும் வகுப்பு 0 4 0 ஐந்தாம்வகுப்பு 0 6 0

### கலைமகள் கதாவாசகம்

முதல் புத்தகம் விலை .... 0 2 0

இரண்டாம் புத்தகம் விலை .... 0 3 0

### கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாய்க்கர்.

1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணு 0 5 0

2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, 0 6 0

3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, 0 8 0

4-வது புத்தகம் (5வது வகுப்பு ,, 0 9 0

### நீதிக்கட்டுறைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. எ. எல். டி.

முதல் புத்தகம் அணு .... 0 4 0

இரண்டாம் புத்தகம் ,, .... 0 7 0

கலைமகள் நீதிக்கதைகள் ,, .... 0 4 0

### இந்து தேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எம். எ., எல். டி.

முதற் புத்தகம் விலை அணு .... 0 4 0

இரண்டாம் புத்தகம் ,, .... 0 5 0

எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. எ., எல். டி. எம். ஆர். எ. எஸ்.

வட ஆற்காடு பூகோளம் அணு .... 0 4 0

செங்கற்பட்டு பூகோளம் ,, .... 0 5 0

### பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். எ. எல். டி.

முதற் புத்தகம் விலை 0 5 0 இரண்டாம் புத்தகம் 0 7 0

மூன்றும் புத்தகம் 0 6 0 நான்காம் புத்தகம் 0 8 0

ஐந்தாம் புத்தகம் 0 9 0

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.**

நெ. 2, சகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதருஸ்.

## எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்கூர், சிலோன், பர்மா, துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இது வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

எம். எஸ். இராகவன் பி. எ., எல். டி., எழுதியவை. ரூ. அ. ப.

கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் 0 2 6

,, ,, இரண்டாம் ,, 0 3 0

,, ,, மூன்றும் ,, 0 4 0

,, ,, நான்காம் ,, 0 4 6

,, ,, ஐந்தாம் ,, 0 6 0

புதிய புஸ்தகங்கள் வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை,

கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 6 .... 0 7 0

,, ,, நெ. 7 .... 0 8 0

,, ,, நெ. 8 ... 0 9 0

உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி. கார்டன் முகவுரையுடன் 0 3 0

,, ,, 2. ,, ,, 0 4 0

,, ,, 3. ,, ,, 0 5 0

தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் 0 4 0

,, ,, 2. ,, 0 5 0

,, ,, 3. ,, 0 5 0

சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் 0 6 0

சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது (இ. வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) 0 5 0

சிறுமணிக் கதைகள் — எஸ். எஸ். அருணகிரி நாதர் 0 5 0

கம்பர் அல்லது கவியரசு-பண்டிதர் ஆ. கா. கன்னையா 0 5 0

தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை — பண்டிதர் கா. ர. கோவிந்த ராஜ முதலியார் .... .... 0 4 0

சிறுவர் இந்துதேச சரித்திரம் — வி. ஜயராம் அய்யர் (பி. எ., பி. எல்.,) ... .... .... .... 0 5 0

ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் — முதற் புத்தகம், எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. எ. எல். டி. 0 5 0

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,**

புஸ்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்

---

**1. "கக்வா"** க்ஷக்துவானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப்பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரூ 1
3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனம்.

**2. க்லோரோ சாலினல்** இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா பேதி, வயிற்றுநோய், இவைகளை விரைவில் நீங்கும்.
புட்டி ரூ. 1—4—0

**3. என்னைத் தைலம்.** ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும்.
புட்டி விலை ரூபா 1 4 0

**4. நியூரல் தைலம்.** ஒற்றைத்தலைவலி முதல் சகலவிதமான தலைவலிகளையும் நீக்கும். 25 வருஷ அனுபோகமுள்ளது. புட்டி ரூ. 1—4—0 தபால் சிலவு வேறு.

மருந்து காட்லாக் இனம்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்குமாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

**ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு**


கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. தேவதாசர் B. A. L. T. M. T. Sc.,
தாசர் சித்த வைத்தியசாலை,
தின்னனூர், ஆர். எஸ்.


# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய




## மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு ஜூ ரூபா 1.

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

---

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் சிலவு இல்லாமல் அனுப்பப்படும்.

**மதன மஞ்சரி பார்மஸி. 1-94, சைனு பஜார் ரோட், மதராஸ்.**

# ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினுல் தேக சுகத்தைக் கெடுத்துக் கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனுக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையென்ருல் உடனே உபயோகித்து தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபகக் குறைவு, தாதுபுஷ்டியின்மை முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூபா 1-0-0.

இனும்! காம சாஸ்திரம் இனும்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**

**26, பிராட்வே, மதராஸ்.**



# தமிழ்க் கடல் ஆபீஸ்

சாந்தோம் - மயிலை, சென்னை

| | | அ. | பை |
|---|---|---|---|
| 1 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - I | 2 | 6 |
| 2 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - II | 3 | 6 |
| 3 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - III | 4 | 0 |
| | குட்டிக் கதைகள் - முதற் புத்தகம் | 2 | 0 |
| 4 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - IV | 5 | 0 |
| | குட்டிக் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| | ஆகாய விமானம் | 2 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| 5 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - V | 6 | 0 |
| | குட்டிக் கதைகள் - மூன்ரும் புத்தகம் | 4 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| | பெரிய உலகத்துச் சிறிய பிள்ளைகள் | 5 | 0 |
| I பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - முதற் புத்தகம் | 7 | 0 |
| | சிறுவர் கதைகள் - முதற் புத்தகம் | 3 | 0 |
| II பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - இரண்டாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| III பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - மூன்ரும் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - மூன்ரும் புத்தகம் | 4 | 0 |
| | உடல் நலம் | 4 | 6 |
| IV பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - நான்காம் புத்தகம் | 10 | 0 |
| | லண்டன் மாநகரம் | 6 | 0 |
| V பாரம் - | மேல் நாட்டுப் பேரறிஞர் | 10 | 0 |

'Tamil Kadal' Office, San Thome, Madras.

ரிஜிஸ்டர் நெ. 2912

# ஜீவாம்ருதம்

## பலஹீனம்
அல்லது
## நரம்புத் தளர்ச்சிக்கு ::
## :: கைகண்ட ஔஷதம்




உங்களுக்கு வேலை அதிகமாயிருக்கிறது. ஆயினும் வேலைசெய்ய முடியவில்லை. காரணம் பலக்குறைவு. சரீரம் சோர்வடைகிறது. உலக இன்பங்களில் இடுபட முடிகிறதில்லை. வயது அதிகம் ஆகவில்லை. ஆனால் வயதிற்குத் தக்க சுறு சுறுப்பும் ஜீவசக்தியும் இல்லாமல் ஏக்கங்கொள்ள வேண்டியதாயிருக்கிறதல்லவா? இந்த மனோசஞ்சலத்தை ஒரு பாட்டில் ஜீவாமிருதத்தைக் கொண்டு தகர்த்தெறியுங்கள். ஜீவாமிருதத்தை உட்கொண்டவர்கள் கவலையின்றி சுகமாக வாழ்கிறார்கள். வாழ்வின் பூர்ண பலன் அநுபவிக்க ஜீவாமிருதத்தைவிட உயர்ந்த நண்பன் வேறுகிடையாது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :— “ஆயுர்வேதாஸ்ரமம்” தபாற்பெட்டி நெ. 287, மதராஸ்.

பி. வீரராகவன் அவர்களால், சென்னை, மன்னடி, புதுத்தெரு, நெ. 94'95, இல்லத்தில் “அசோஸியேஷன்” அச்சுக்கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.